ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1946/2 - 2015 දෙසැම්බර් මස 21 වැනි සඳුදා - 2015.12.21

1946/2 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூராதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் மாத்தறை மாநகர சபையின் பிரதி முதல்வர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

முதல்வர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் காரணமாக மாத்தறை மாநகர சபையின் பிரதி முதல்வர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ், மாநகர சபைப் பிரதி முதல்வர் பதவி வகித்த தீகொட கமகே யசரத்ன என்பவர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் மாநகர சபை பிரதி முதல்வர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான மாத்தறை மாநகர சபையின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. கொடிப்பிலி யத்தெஹியகே ஹரீந்திர ருவன் சிந்தக என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது மாத்தறை மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் வேவெல்வல ஹேவகே ரவீந்திர விஜய குமார ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூராதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. கொடிப்பிலி யத்தெஹியகே ஹரீந்திர ருவன் சிந்தக என்பவர், மாத்தறை மாநகர சபையின் பிரதி முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டபிள்யூ. எச். ஆர். விஜய குமார,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மாத்தறை மாநகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
மாத்தறை,
2015, திசெம்பர் 21.

1 - 269

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.